பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**13 01 2026 TUESDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா அடுத்த ஆண்டுக்குள் உருவெடுக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2) வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டத்தின் பலன்கள் மக்களுக்கு கிடைத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

3) இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட அனைத்து தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

4) இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் நேரடி கட்டுப்பாட்டில் செயல்படும் தமிழகத்தின் இரண்டாவது ஆதார் சேவை மையம் இன்று சென்னை அண்ணா நகரில் தொடங்கப்பட்டது.

5) இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Treesa Jolly** - காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>>

உலகிலேயே மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா அடுத்த ஆண்டுக்குள் உருவெடுக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் காந்திநகர் மாவட்டம் மான்சாவில் பொதுக்கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், 2047 ஆம் ஆண்டுக்குள் அனைத்துத் துறைகளிலும் இந்தியாவை உலகிலேயே முன்னணி நாடாக மாற்ற அரசு உறுதிபூண்டுள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் 267 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார்.

சோம்நாத் கோவில் நாட்டின் அடையாளமாக திகழ்வதாக கூறிய அவர், இந்த ஆண்டு முழுவதும் சோம்நாத் பெருமைத் திருவிழா கொண்டாடப்படுவதாக தெரிவித்தார்.

வரும் 2036 -ல் அகமதாபாதில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்த முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக கூறிய திரு அமித் ஷா, உலக விளையாட்டு மையமாக அகமதாபாத் உருவெடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டத்தின் பலன்கள் மக்களுக்கு கிடைத்து

வருவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சட்டம் குறித்து எதிர்க்கட்சிகள் மக்களிடையே தவறான செய்திகளை பரப்புவதாக குற்றம் சாட்டினார்.

நாடு முழுவதும் இந்த புதிய சட்டம் வரவேற்கப்படுவதாக கூறிய திரு கிரண் ரிஜிஜூ, இதன்மூலம் ஊரகப்பகுதிகளில் சுகாதாரம் மற்றும் நீர் சேமிப்பு திட்டங்கள் மேம்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் நேரடி கட்டுப்பாட்டில் செயல்படும் தமிழகத்தின் இரண்டாவது ஆதார் சேவை மையம் இன்று சென்னை அண்ணா நகரில் தொடங்கிவைக்கப்பட்டது.

தமிழகத்தின் முதல் மையம் மதுரையில் செயல்பட்டு வருகிறது.

நவீன வசதிகளுடன் சென்னை அண்ணாநகரில் தொடங்கப்பட்டுள்ள இந்த ஆதார் சேவை மையத்தில் 16 ஆதார் பதிவு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இதன்மூலம் ஒரு மணிநேரத்திற்கு 100 பேர் வீதம், ஒரு நாளில் 800 பேருக்கு சேவை வழங்க முடியும் என்று ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாநிலத்தில் மேலும் 8 மையங்கள் திறக்கப்பட உள்ளதாகவும், வரும் செப்டம்பர் மாத இறுதிக்குள் தமிழகம் முழுவதும் மொத்தம் 30 நேரடி ஆதார் சேவை மையங்கள் செயல்பாட்டுக்கு வரும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த மையம் குறித்து செய்தியாளர்களிடம் விளக்கிய, இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் துணை தலைமை இயக்குநர் திருமதி ஆனி ஜாய்ஸ், பொதுமக்கள் புதிய ஆதார் பதிவு மற்றும் திருத்தங்களை இந்த மையங்கள் மூலமாக மேற்கொள்ளலாம் என்றும், ஆதார் தொடர்பான குறைகளையும் இங்கு தெரிவித்து தீர்வுகாணலாம் என்றும் தெரிவித்தார்.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கைவிரல் ரேகை பதிவு செய்யப்படாமல் இருந்தால், பயொ மெட்ரிக் புதுப்பித்தல் கட்டாயம் என்றும் அவர் கூறினார்.

பத்தாண்டுகளுக்குமுன் ஆதார் எடுத்த பெரியவர்கள் முகவரி, மற்றும் தொலைபேசி எண் மாற்றம் போன்ற விவரங்கள் இருந்தால் புதுப்பித்துக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட மாநில அரசின் மின் ஆளுமை முகமையின் தலைமை செயல் அதிகாரி

டாக்டர் ஆல்ஃபி ஜான் வர்கிஸ், மாநிலத்தில் வயது வந்தோருக்கான ஆதார் பதிவு 100 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக கூறினார்.

தற்போது குழந்தைகளுக்கான புதுப்பித்தல் பணிகளில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆன்லைன் மூலமாகவோ அல்லது இ-சேவை மையங்களிலோ ஆதார் திருத்தம் செய்யும்போது சிக்கல்களை சந்திப்பவர்களுக்கு இந்த நேரடி ஆதார் சேவை மையம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் திரு ஆல்ஃபி ஜான் வர்கிஸ் கூறினார்.

<<<<<<>>>>>>>

தகவல் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை மாணவர்கள் முழுமையாக புரிந்துகொண்டு அவற்றை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

உதகை மாவட்டம் கூடலூரில் பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், மாணவர்களை திறன்மிக்கவர்களாக உருவாக்கும் சிறப்பான சேவையை பள்ளிகள் செய்து வருவதாக கூறினார்.

பள்ளிப் பருவத்தில் இருந்தே மாணவர்களுக்கு நல்லிணக்கத்தை கற்றுத் தர வேண்டும் என்றும், பிற நாடுகள் மதிக்கும் நாடாக

இந்தியாவை உருவாக்க வேண்டுமெனில், மக்கள் ஒற்றுமை உணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியம் என்றும் திரு ராகுல்காந்தி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட 83 தமிழக மீனவர்களையும், 252 மீன்பிடி படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த பத்து மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, இன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த மீனவர்கள் உட்பட இலங்கை சிறைகளில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும், அவர்களின் மீன்பிடி படகுகள் சிறைபிடிக்கப்படுவதும் மிகுந்த கவலை அளிப்பதாக முதலமைச்சர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இத்தகைய நடவடிக்கைகளை தடுக்க மத்திய அரசு தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின், வெளியுறவுத்துறை அமைச்சரை வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>>

பொங்கல் பண்டிகை முடித்து சென்னை திரும்பும் மக்களின் வசதிக்காக கோவை போத்தனூரில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு வரும் 18-ஆம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

போத்தனூரில் 18-ஆம் தேதி காலை மணி 7.40-க்கு புறப்படும் இந்த ரயில், மாலை மணி 4.45-க்கு சென்னை சென்ட்ரல் வந்தடையும்.

இந்த ஒருவழி சிறப்பு ரயிலுக்கான முன்பதிவு நாளை தொடங்குகிறது.

<<<<<<>>>>>>>

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, வேலூரை அடுத்த பொய்கையில் நடைபெற்ற மாட்டுச்சந்தையில் சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளது.

தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகாவிலிருந்தும் கொண்டுவரப்பட்ட மாடுகள் விற்பனை செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — மோகன் — 37 Sec.)***

<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை ஓட்டேரி தொடக்கப்பள்ளியில் 4 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டிடம் கட்டுவதற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு சேகர்பாபு இன்று அடிக்கல் நாட்டி தொடங்கிவைத்தார்.

--------------

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், சமூக நலன் மற்றும் உரிமைத்துறையின் மூலம் 60 மகளிருக்கு நிதியுதவிகளை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று வழங்கினார்.

---------------

தருமபுரி மாவட்டத்தில் தலைக்கவசம் அணிவது குறித்த இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை அம்மாவட்ட காவல்

கண்காணிப்பாளர் திரு மகேஸ்வரன் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

----------

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு அலுவலர்களால் கொண்டாடப்பட்ட சமத்துவ பொங்கல் விழாவில் ஆட்சியர் திரு ரஞ்ஜித் சிங் கலந்துகொண்டார்.

----------------

செங்கல்பட்டு மாவட்டம் பையனூரில் தனியார் பல்கலைக்கழகம் சார்பில் ஒன்பது முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு மற்றும் தனியார் பள்ளிகள் இடையேயான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்காட்சியின் இறுதிச்சுற்றுப் போட்டிகள் இன்று நடைபெற்றன.

----------------

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அரசு கல்லூரியில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் தமிழர்களின் பாரம்பரிய நடனம் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

------------

நாகை மாவட்டத்தில் தனியார் பள்ளி ஒன்றில், இயற்கை விவசாயத்தில் தயாரிக்கப்பட்ட கைக்குத்தல் அரிசியினை கொண்டு பொங்கல் சமைத்து மாணவ, மாணவியர் சமத்துவ பொங்கலை கொண்டாடினர்.

----------------

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பக பகுதியில் சட்டவிரோதமாக செயல்பட்டு வந்த 42 தங்கும் விடுதிகளுக்கு உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சீல் வைக்கும் பணி தொடங்கியுள்ளது.

---------------

தேனி மாவட்டம் மஞ்சலாறு அணையிலிருந்து தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 200 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Treesa Jolly** — காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

புதுதில்லியில் இன்று தொடங்கிய இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **21-15, 21-11** என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Sukitta Suwachai — Ornnicha** இணையை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-12, 21-15,** என்ற செட் கணக்கில், சகநாட்டு வீரர் ஆயுஷ் ஷெட்டியை வென்றார்.

**<<<<<<>END>>>>>**